www.Padasalai.Net www.TrbTnpsc.com

தேர்வு எண் | | | | | | |

**வகுப்பு : 12**

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023 -24

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

14X1=14

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற நூல்.
   அ) நன்னூல் ஆ) இலக்கண விளக்கம் இ) தண்டியலங்காரம் ஈ) தொல்காப்பியம்

2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்
   இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

3. தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதைக் குறிப்பிடும் பாடல் எத்திணையைச் சார்ந்தது?
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) மருதம்

4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

5. பொருத்துக.
   அ) திருவல்லிக்கேணி ஆறு – 1. மாவலிபுரச் செலவு
   ஆ) பக்கிங்காம் கால்வாய் – 2. கல்கோட்டி
   இ) பல்லாவரம் – 3. அருங்காட்சியகம்
   ஈ) எழும்பூர் – 4. கூவம்
   அ) 1 2 3 4 ஆ) 4 2 1 3 இ) 4 1 2 3 ஈ) 2 4 3 1

6. ஆராய்ந்து சொல்கிறவர்
   அ) தூதுவர் ஆ) அரசர் இ) சொல்லியபடி செய்பவர் ஈ) உறவினர்

7. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சி துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

8. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
   அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

9. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் யார்?
   அ) நள்ளி ஆ) நல்லியக்கோடான் இ) அதியமான் ஈ) பேகன்

10. சாகித்திய அகாதெமி விருது பெற்ற தோப்பில் முகமது மீரான் அவர்களின் நூல் எது?
   அ) சாய்வு நாற்காலி ஆ) தலைக்குளம் இ) துறைமுகம் ஈ) கூனன் தோப்பு



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

11. Lobby, File - தமிழில் உயிர்மெய்க் குறில் எழுத்துகள் எத்தனை

அ) சிற்றறை, கோப்பு ஆ) ஓய்வறை, அஞ்சலகம் இ) ஓய்வறை, கோப்பு ஈ) முகப்பு, உறை

12. தமிழில் திணைப்பாகுபாடு -------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) எழுத்துக்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) சொற்குறிப்பு

13. சு.கு.சமுத்திரனாரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற பாவலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இஸ்லாமும் தமிழும்

இ) கிறித்துவமும் தமிழும் ஈ) சமணமும் தமிழும்

14. அன்பும் அறனும் என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு

அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) எண்ணும்மை

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக. 3x2=6

15. வசனம், கவிதை வேறுபாடு தருக.

16. செல்வம் இருப்பதற்கான எதிராக வள்ளுவம் உரைப்பன யாவை?

17. மையாடல் விழா – குறிப்பு தருக.

18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19 பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?

20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.

21. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு – 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) கிணற்றுத்தவளை போல் (அல்லது) ஆ) உள்ளங்கை நெல்லிக்கனிபோல்

23. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்

ஆ) நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

24. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

25. பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) அலை, அளை, அழை (அல்லது)

ஆ) கனம், கணம்

26. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான். அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒ[ரு] சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

27. ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) புதுப்பெயல் ஆ) செல்லிடத்து



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

28.ஏதேனும் ஒன்றனுக்குப் உறுப்பிலக்கணம் தருக.

அ) கண்டான் ஆ) நினைக்கின்ற

29.பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடரமைக்க.

அ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

ஆ) அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

30.குறிப்பிட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

பகுதி – III

பிரிவு–1 2x4=8

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

31. "ஏங்குகொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32.சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33.பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?

34.யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

பிரிவு–2 2x4=8

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

35.மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36.மணலில் எழுதியதுமுதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பவற்றைக் குறிப்பிடுக.

38.மயிலை சீனி, வேங்கடசாமியின் தொடக்ககால ஆய்வுகள் குறித்து எழுதுக.

பிரிவு–3 3x4=1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கு மட்டும் வினா எண், 41 –க்குப் பதிலாக மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது

39. அ) நிரல்நிறை அணியை விளக்குக. (அல்லது)

ஆ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

0. அ) வாகைத்திணையைச் சான்றுடன் விளக்குக. (அல்லது)

ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.

1. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (அல்லது) ஆ) யானைக்கும் அடிசறுக்கும்

.இலக்கியம் நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை விளக்கி எழுத

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

– திரிகூட ராசப்பக் கவிராயர்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

43. தமிழாக்கம் தருக.

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. If you want people to understand you speak their language.
3. Knowledge of languages is the doorway to wisdom.
4. The limits of my languages are the limits of my world.

காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா:

43. கீழ்க்காணும் பத்திகளைப் படித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை அளிக்கவும்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றம் உள்ளிட்டவையே பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்கு மூல காரணமாகின்றன. 'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்புமாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.

உணவுப் பொருட்களில் அடங்கியுள்ள சத்துகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றைப் பற்றி தெரிந்த அறிவு, ஆரோக்கிய உணவினைத் தேர்வு செய்ய மிகவும் உதவியாய் இருக்கும். ஒவ்வொரு மனிதருக்கும் அவரது வயது, பாலினம், உடல் உழைப்பு, உடல்நிலை, வாழும் இடம், பருவநிலை ஆகியவற்றின் அடிப்படையில் ஊட்டச்சத்துகளின் தேவை மாறுபடும்.

தேவையான தானியங்களுடன் பருப்பு மற்றும் பயறு வகைகளைச் சேர்த்து, அதிக காய்கறிகளுடனும் பழங்களுடனும் கூடிய உணவுமுறையே நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

வினாக்கள்.

அ) நம் உடல்நலப் பாதிப்புகளுக்கான மூல காரணம் எது?

ஆ) நம் முன்னோர்களின் வாழ்க்கை முறை எத்தகையது?

இ) சமச்சீர் உணவு என்றால் என்ன?

ஈ) நம் ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு எது?

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

(அல்லது)

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்துவக் கம்பரே' என்பதை நம் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. – எவ்வாறு? விளக்குக.

(அல்லது)

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

## பகுதி – V

அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

47. அ) "குகனோடும்...... " எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

ஆ) '.....தொடர்பு' – என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com